நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
3 JUL 2008
சென்னை - 600 005

சுருக்கம்

பணியமைப்பு - நகராட்சிப் பொறியியல் பணியமைப்பு - நகராட்சி நிர்வாக ஆணையரகம் - தலைமையிட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் - தலைமைப் பொறியாளர் பணியிடமாக தரம் உயர்த்தி ஆணைகள் - வெளியிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ட.3) துறை**

அரசாணை (நிலை) எண்: 125

நாள்: 2.7.2008

3/7/08

படிக்கப்பட்டது :

நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 52864/2004/OP1, நாள்: 14.1.2008.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில், 28.5.1981 நாளிட்ட ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை (நிலை) எண்: 980–ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் பெருந்திட்டங்களை தாமே செயல்படுத்திடவும், மேலும், மண்டல செயற்பொறியாளரின் அதிகாரத்திற்கு மேற்பட்ட மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உருவாக்கப்பட்ட பொறியியல் பிரிவிற்கென ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது என்றும், மேற்படி பதவிக்கான அதிகாரமானது, பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளரின் பதவிக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரத்திற்கு ஒப்பானதாகும் என்றும், மேற்படி பதவி உருவாக்கப்பட்ட நாளிலிருந்து கண்காணிப்புப் பொறியாளரின் பங்கு பெருமளவில் விரிவடைந்துள்ளது என்றும், மேலும், பேரூராட்சிகள் இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பெரும் திட்டங்கள், கண்காணிப்புப் பொறியாளரின் உள்ளீட்டு எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், உலக வங்கியின் உதவியுடன் பதினாறு வருடங்களுக்கு முன்பு துவக்கப்பட்ட, "நகராட்சி நகர்ப்புர வளர்ச்சி நிதியம்" (Municipal Urban Development Fund) மற்றும் "தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டங்கள்–I, II, III" (Tamil Nadu Urban Development Project-I to III) ஆகியவற்றின் கீழ், குடிநீர் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், பெரிய வணிக வளாகங்கள் ஆகியவை கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் இயங்கும் பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்காணும் பணிகளைத் தவிர, தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்–III ன் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களுக்கான வேலைகளையும் தற்போதைய கண்காணிப்புப் பொறியாளர் நிர்வகித்து வருகிறார் என்றும், பிற துறைகளைச் சார்ந்த தலைமைப் பொறியாளர் மற்றும் பொறியியல் இயக்குநர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழில்நுட்ப குழுமத்தின் கூட்டுநராகவும் (Convenor) கண்காணிப்புப் பொறியாளர் செயலாற்றி வருகிறார் என்றும், மேற்கண்ட சூழ்நிலையில், தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பெருந்திட்டங்களை

நிறைவேற்ற, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உள்ள ஒரு தலைமையிட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தினை தலைமைப் பொறியாளர் பணியிடமாக தரம் உயர்த்தலாமென்றும், இப்பொருள் குறித்து தக்க ஆணை பிறப்பிக்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. இப்பொருள் குறித்து அரசு கவனமாக பரிசீலித்தது. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உள்ள கண்காணிப்புப் பொறியாளரின் பொறுப்புகள் வெகுவாக அதிகரித்துள்ளது. மேலும், ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNUDP), ஜெர்மனி நாட்டு நிதி நிறுவனம் (KfW) மற்றும் ஜப்பான் பன்னாட்டு நிதியம் (JBIC) ஆகியவற்றின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உள்ள தலைமையிட கண்காணிப்புப் பொறியாளர் (Superintending Engineer) பணியிடத்தினை தலைமைப் பொறியாளர் (Chief Engineer) பணியிடமாக ரூ.16400–450–20000 ஊதிய ஏற்ற முறையில் தரம் உயர்த்தக் கோரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை மற்றும் நிதித்துறையின் அ.சா.எண் முறையே 8347/F.1/2008, நாள்: 20.2.2008 மற்றும் 1566/FS./P/2008 நாள் 20.6.2008-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - 600 005.
நகல்
நிதித்துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை - 600 009.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
மாநில கணக்காயர், சென்னை - 600 018. (பெயரிட்ட உறையில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 600 005.
உள்ளாட்சி நிதிக்கணக்குத் துறை, சென்னை - 600 108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந 2/மாந.4/ மாந.5/ மாந.6) துறை,
சென்னை - 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

27/08

பிரிவு அலுவலர்.